# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:— 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42—ஆம் விதி, 53—ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII—ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III—ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :— | **S.C.No.138/2013** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :— | **எ.சா—03 (DW—03)** |
| **பெயர்** | :— | **கதிரேசன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :— | |
| **ஊர்** | :— | |
| **வருவாய் வட்டம்** | :— | |
| **சமூகம் (சாதி)** | :— | |
| **தொழில்** | :— | |
| **மதம்/சமயம்** | :— | |
| **வயது** | :— | |

**2025—ஆம் ஆண்டு ஜுலைதிங்கள் 16 ஆம் நாள் 1969—ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

1 ஆம், 2 ஆம், 3 ஆம், 5 ஆம், 7 ஆம், 13 ஆம், 14 ஆம், 16 ஆம், 17 ஆம் எதிரிகள் தோன்றினர். 6 ஆம், 8 ஆம், 9 ஆம், 11 ஆம், 15 ஆம், 18 ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், வங்குடி ஊரில் வசிக்கிறேன். எனக்கு 86 வயதாகிறது. நான் பிறந்தது முதல் அந்த ஊரில்தான் வசிக்கிறேன். நான் ஆரம்பத்தில் வாகன ஓட்டுநராக பணிபுரிந்தேன். தற்போது வீட்டில்தான் உள்ளேன்.

அரசாங்கத்திற்கு தெரியாமல் எங்கள் ஊரில் காசிநாதன் என்பவர் கள்ளச்சாராயம் காய்ச்சினார். அவர் எனக்கு பங்காளி உறவுமுறை. காசிநாதனுக்கு பிரபு, சுரேஷ் ஆகியோரும் உடந்தையாக இருந்தனர். அவர்கள் மூவரும் பங்காளிகள். காவல் துறையினர் அதை தடுக்க கடுமையாக நடவடிக்கை எடுத்தனர். காவல் துறையினர் எங்கள் ஊருக்கு வந்து எல்லோருக்கும் தொந்தரவு கொடுத்தனர். என் வீட்டிற்கு பின்புறம் 10 மாமரங்களும் சில தென்னை மரங்களும் இருந்தன. சுமார் 15 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் நான் என் வீட்டு திண்ணையில் படுத்து உறங்கிகொண்டிருந்தேன். இரவு சுமார் 1.00 மணியளவில் என்னை காவல் துறை அதிகாரி ஒருவர் தட்டி எழுப்பினார். நான் காவல் துறை தொந்தரவு இருக்ககூடாது என்றுதான் தனியாக வந்துள்ளேன். இங்கு வந்து ஏன் தொந்தரவு செய்கிறீர்கள் என்று கேட்டேன். சாராயம் காய்ச்சும் ஆட்கள் உன் தோட்டத்தில் வந்து பதுங்குகிறார்கள் என்றும் அதனால் வந்தோம் என்றும் சொன்னார்கள். அந்த சமயத்தில் என் தோட்டத்திலிருந்து 10 காவலர்கள் வந்தனர். நான் அதுபோன்று எதுவும் வைத்துக்கொள்ள மாட்டேன் என்னை தொந்தரவு செய்யாதீர்கள் என்று நான் சொன்னேன். காவல் துறையினர் சரி என்று சொல்லிவிட்டு சென்றனர்.

காசிநாதனும் அவரை சார்ந்தவர்களும் சாராயம் காய்ச்சுவதால்தானே ஊருக்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது என்று சொல்லி ஊர் மக்கள் காசிநாதன்

வீட்டிற்கு சென்று காசிநாதனை கேட்டார்கள். தேசிங்குபாலன் என்பவரின் தலைமையில் சென்று கேட்டார்கள். அதனால் தேசிங்குபாலன்மீது காசிநாதனுக்கு வருத்தம் இருந்தது. தேசிங்குபாலன்மீது கண் வைத்தனர். தேசிங்குபாலனை காசிநாதன் தரப்பினர் கொன்றுவிட்டனர். அன்றிலிருந்து இன்றுவரை காவல் துறையினர் ஊரில் 4 இடத்தில் பாதுகாப்பிற்கு உள்ளனர். பால்வாடி, காளியம்மன் கோவில் ஆகிய இடங்களில் காவல் துறையினர் இருப்பார்கள்.

தேசிங்குபாலன் கொலை வழக்கில் கைதானவர்கள் பிணையில் வந்தார்கள். மீண்டும் சாராயம் காய்ச்சும் தொழிலை செய்ய ஆரம்பித்தனர். தேசிங்குபாலனை கொன்றுவிட்டு மீண்டும் வந்து சாராயம் காய்ச்சுகிறார்களே என்று ஊர் மக்களுக்கு கோபம் இருந்தது. ஒரு நாள் கலவரம் ஏற்பட்டது. அன்று காவல் துறையினரும் அங்கு இருந்தனர். நான் என் தோட்டத்தில் இருந்தேன். அன்று காலை சுமார் 8.00 அல்லது 8.30 மணி இருக்கும். காளியம்மன் கோவில் பகுதியிலிருந்து கூச்சல் கேட்டது. நான் முதன்மை சாலைக்கு சென்று என்ன நடக்கிறது என்று பார்த்தேன். அங்கு கூட்டமாக அங்கும் இங்கும் தெரித்து ஓடினர். அதை பார்த்த நான் பதற்றம் அடைந்து என் வீட்டிற்கு ஓடிவிட்டேன். நான் அந்த வழியாக சென்ற ஒரு இருசக்கர வாகனத்தில் அவரிடம் கேட்டு பாப்பாகுடி ஊருக்கு சென்றேன். நான் சென்றுகொண்டிருந்தபோது எதிரில் காவல் துறை வாகனம் வந்தது.

நான் பாப்பாகுடியில் இறங்கி தேநீர் கடையில் தேநீர் வாங்கி குடித்தேன். அங்கு நின்ற ஒருவர் வங்குடியில் சும்மா இருந்தவர்களை எல்லாம் காவல் துறையினர் வாகனத்தில் ஏற்றுகின்றனர் என்று சொன்னார். நான் அங்கிருந்து வடலூருக்கு பேருந்தில் சென்று அங்கிருந்து கடலூருக்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை செய்திதாளை பார்த்தபோது வங்குடியில் 5 பேர் கொலை என்று செய்தி வந்தது.

காசிநாதனின் வீடு காளியம்மன் கோவிலிருந்து சுமார் 150 அடி தூரம்

கிழக்கே உள்ளது. காசிநாதனின் வீட்டிலிருந்து சற்று தூரத்திலுள்ள ஓடையில் சாராயம் காய்ச்சுவார்கள். காசிநாதனின் வீடு தெருவில்தான் இருந்தது. அங்கிருந்து ½ கி.மீ தூரத்தில் இருந்த கூரை கொட்டைகையில் தற்போது வசிக்கின்றனர்.

தேசிங்குபாலன் கொலை வழக்கில் சிறைக்குச் சென்று பிணையில் வந்தபோது காசிநாதனின் வீடு சேதம் அடைந்துவிட்டது. அதற்கு மேற்கில் காசிநாதனின் அண்ணன் செல்வத்தின் ஓட்டு வீடு இருந்தது. அங்குதான் இருந்தனர்.

**குறுக்கு விசாரணை**

காசிநாதனின் இரண்டாம் மகனின் பெயர் எனக்கு தெரியாது. அவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். எதிரி ரவிச்சந்திரனை தெரியும். அவர் அந்த சமயத்தில் ஊராட்சிமன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டார் என்றால் சரிதான். வேறு பலரும் தலைவர் பதவிக்கு போட்டியிட்டனர் என்றால் சரிதான். தேசிங்குபாலன் ரவிச்சந்திரனுக்கு ஆதரவாக இருந்தார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. தேசிங்குபாலன் அவருடைய நிலத்திற்கு காசிநாதனின் நிலத்தை தாண்டிதான் செல்ல வேண்டும் என்றால் அது எனக்கு தெரியவில்லை. எனக்கு என் வீடு உண்டு வேலை உண்டு என்று இருப்பேன்.

எதிரிகள்தான் சாட்சியம் அளிக்க என்னை அழைத்தார்கள். எதிரிகள் சொல்லிக்கொடுத்து காசிநாதன் குடும்பத்தினர் சாராயம் காய்ச்சினார்கள் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் ஊர்மக்களுக்கும் காசிநாதன் குடும்பத்திற்கும் பகை இருந்தது என்று எதிரிகள் சொல்லிக்கொடுத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

காளியம்மன் கோவில் திருவிழாவை காசிநாதன் குடும்பத்தினர் தலைமை ஏற்று நடத்துவார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. கோவில் திருவிழா சம்மந்தமாக ரவிச்சந்திரன் தரப்பினருக்கும் காசிநாதன் தரப்பினருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு காசிநாதன் தரப்பினர் கோவில் நிருவாகத்தை விட்டு வெளியேறினர் என்றால் அது எனக்கு தெரியாது. வழித்தடம் சம்மந்தமாக தேசிங்குபாலனுக்கும் காசிநாதனுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. எதிரிகள் தேசிங்குபாலனுக்கு ஆதரவாக இருந்தனர் என்றால் அது எனக்கு தெரியாது. அதனால்தான் தேசிங்குபாலனுக்கும் காசிநாதனுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் சாராயம் காய்ச்சும் பிரச்சனை எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

தேசிங்குபாலன் இறந்தபின் கலவரம் ஏற்பட்டு காசிநாதனின் வீட்டை இடித்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தேசிங்குபாலன் கொலை வழக்கில் கைதானவர்கள் பிணையில் வந்த பிறகு தேசிங்குபாலனின் ஆதரவாளர்களான எதிரிகள் காசிநாதனின் குடும்பத்தினரை கொலை செய்ய வெட்டினார்கள் என்றும் அதில் ஐவர் இறந்துவிட்டனர் என்றும் சிலர் தப்பித்துக்-கொண்டனர் என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது.

கலவரத்தில் ஐவர் இறந்தனர் என்று நான் சொல்வது பொய் என்றும் எதிரிகள்தான் திட்டமிட்டு கொலை செய்தனர் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கனகவள்ளி என் தங்கை. கனகவள்ளியின் மகன்தான் தேசிங்குபாலன் என்றால் சரிதான். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.